Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 18, 2022

வெள்ளிக்கிழமை மார்ச் 18, 2022 | ஒளி: 07 கதிர்: 259 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



முதலில் அக்கம் பக்கத்தினர்:

# ஆதரவுப் பொதி நீடிப்பு

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் நேற்று (17) கைச்சாத்திட்டன என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது. இந்தக் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர், டுவிட் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சரான கலாநிதி எஸ். ஜெய்சங்கர் 'அண்டை நாடு முதலில்; இந்தியா இலங்கையுடன் நிற்கிறது.எரிபொருள், மருந்து, அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்காகவே இந்தியாவால் இந்தக் கடனுதவி வழங்கப்படுகின்றது' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



## விலை கூடும்



பழங்கள் மற்றும் பால் பொருட்கள் போன்ற இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தால், விசேட பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய, இது தொடர்பான அறிவிப்பை வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. விமலேந்திரராஜா, வெளியிட்டுள்ளார்.

மார்ச் 10ஆம் திகதி முதல் ஆறு மாத காலத்துக்கு இந்தச் சிறப்பு பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தயிர், பட்டர் உள்ளிட்ட பால் உற்பத்தி பொருட்களுக்கு கிலோ கிராம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயும் ஒரு கிலோ கிராம் சீஸ் வகைகளுக்கு 400 ரூபாயும் வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

அப்பிள், திராட்சை, உலர் திராட்சை உட்பட சில பழவகைகளுக்கும் கிலோ கிராம் ஒன்றுக்கு 300 ரூபாயும் பேரீச்சம் பழம், தோடம்பழம் ஆகியவற்றுக்கு 200 ரூபாயும் விசேட பண்ட வரியாக விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2



## தரவுகளை நிறுத்தியது

இலங்கை மத்திய வங்கியால், 83.04 பில்லியன் ரூபாய் புதிய பணம் அச்சிடப்பட்ட ஒரு நாளுக்குப் பின்னர், பணம் அச்சிடும் தரவுகள் வெளியிடுவதை நிறுத்தியுள்ளது. இலங்கை மத்திய வங்கியிடம் 15ஆம் திகதியன்று திறைசேரி உண்டியல் பத்திரங்களின் தொகை 1,627.01 பில்லியன் ரூபாயாக காணப்பட்டுள்ளதுடன், இந்தத் தொகை கடந்த 14ஆம் திகதி 1,543.79 பில்லியன் ரூபாயாக காணப்பட்டுள்ளது.



(வைப்பக படம்)

## கப்ரால் மீது முழு நம்பிக்கை உள்ளது

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை பதவி விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானதாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "அஜித் நிவார்ட் கப்ரால் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது" என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று (17) அனுப்பிய செய்திக்குறிப்பிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கரைக்கு வந்த 'எரிவாயு'வை தரையிறக்குவதில் சிக்கல்




கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிட்டுள்ள எரிவாயு கப்பல்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ள போதும், கப்பலிலுள்ள எரிவாயுவை தரையிறக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்

நாடளாவிய ரீதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, எரிபொருள் வரிசையில் நிற்போருக்கும் நிலைய உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கு இடையேயும் வாக்குவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில், வரிசையில் நின்ற ஒருவர் மீது சிலர் தாக்குதல் நடத்தும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்த நிலையில், கெஸ்பேவ - பண்டாரகம வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகேயும் நேற்றுமுன்தினம் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2





பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்தால்

## இராணுவமயமாக்கலுக்கு கடுமையான எதிர்ப்பு

நாட்டின் உயர்கல்வியை இராணுவமயமாக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் ஒன்றியம் கடுமையாக எதிர்த்தது.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தால் நேற்று முன்தினம் (16) முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## கொழும்புக்கு முன்னுரிமை

கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்புகளை விநியோகிப்பதற்காக பெற்றோல், டீசல் கொண்ட எரிபொருள் பவுசர்கள், ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே, நேற்று (17) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



புதுமாத்தளனில்

## மாணவிகள் இருவர் மாயம்

■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் 14 வயதுடைய இரு மாணவிகளை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் (17) மாலைநேர வகுப்புக்காகச் சென்ற நிலையில், வீடு திரும்பவில்லை என பெற்றோர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுமிகள் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், முல்லைத்தீவு தலைமையக பொலிஸாரின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொடர் போராட்டத்தை

## முடிவுக்கு கொண்டுவர மரணச் சான்றிதழ்



■ க. அகரன்

எங்களது தொடர் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவே, மரண சான்றிதழ் வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறவுகள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளப்படும் பந்தலில் நேற்று (17) ஊடக சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அந்த ஊடக சந்திப்பின் போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## காலியில் சுமந்திரன், சாணக்கியன்



பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிராகவும் அந்தச் சட்டத்தை முற்றாக ஒழிக்குமாறும் வலியுறுத்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் முன்னெடுத்துவரும் கையெழுத்து வேட்டை, காலியில் நேற்று (17) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## 'பிக்-பொக்கெட் அரசாங்கம்'



அரசாங்கத்தின் நிதி முறைகேடுகள் காரணமாக, பொதுமக்களுக்கு சுமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தவறியமைக்கு மேலதிகமாக பொதுமக்களிடத்தில் 'பிக்-பொக்கெட்' அடிப்பதை இது சுட்டிக்காட்டுவதாகவும் தெரிவித்தார்.

தற்போது ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 98 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் ஒரு லீற்றர் டீசல் 126 ரூபாய்க்கும், ஒரு லீற்றர் பெற்றோல் 130 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தவறியமைக்கு மேலதிகமாக பொதுமக்களை பிக்-பாக்கெட் அடிப்பதை இது சுட்டிக்காட்டுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வரிசைகளும் போராட்டங்களும்

## கொரோனாவை அதிகரிக்கும்

கொரோனா தொற்றை கூட்டும் எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள் உள்ளிட்ட அண்மைக்காலமாக மக்கள் கூடும் பாரிய கூட்டங்கள், கொரோனா தொற்றுகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எஃப்பின் ஆதரவை தாமதப்படுத்தியது ஏன்?

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்) ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் ஏன் தாமதப்படுத்தியது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2



தொடர்ச்சிகள்

# ஆதரவுப் பொதி நீடிப்பு

புதுடெல்லிக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை நேற்று முன்தினம் (16) சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தியாவுக்கு வருகை தரும் இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட "ஹைதராபாத் இல்லத்தில்" இந்த சந்திப்பு நடைபெற்றது.

**இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்திப்பதற்கு முன்னதாக, இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன ஸ்ரிங்லா மற்றும் இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி ஆகியோர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.**




இரு தரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆதரவுக்கு நிதியமைச்சர் பசில் நன்றி தெரிவித்தார். இலங்கையின் தேவைகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவும் என்று ஜெய்சங்கர் உறுதியளித்தார். இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்தியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் நிலுகா கதுருகமுவ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிகல ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்திப்பதற்கு முன்னதாக, இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன ஸ்ரிங்லா மற்றும் இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி ஆகியோர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்

பல மணிநேரம் வரிசையில் நின்றிருந்த நுகர்வோர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

டீசல் தீர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, அங்கிருந்தவர்களுக்கும், உரிமையாளருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு வாக்குவாதமாக மாறியதாக தெரியவந்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஊழியர் ஒருவர் தலையிட்டதால், முற்றி கைகலப்பாக மாறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் நுகர்வோர் பலரால் ஊழியர் தாக்கப்பட்டதையடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையத்தக்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் வந்து மோதலை சமரசம் செய்ய முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றும் நாட்டின் பல பிரதேசங்களில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

தேவையான எரிபொருளைப் பெறுவதற்காக பல நுகர்வோர் எரிபொருள் கேன்களுடன் நீண்ட வரிசையில் நிற்பதைக் காண முடிந்தது.

பொதுமக்களுக்கு கேன்கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை வழங்குவதை தவிர்க்குமாறு அரசாங்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்த போதிலும் மக்கள் கேன்களுடன் காத்து நிற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## கப்ரால் மீது முழு நம்பிக்கை உள்ளது

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளதோடு, நாடு எதிர்நோக்கும் பாரிய பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்வதில் பலமான ஒரு சக்தியாக அவர் செயற்படுவார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு, அதிகாரிகள் பற்றி கலந்துரையாடவில்லை என்பதோடு, மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலும் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில், நிதிப் பிரச்சினைகள் மட்டுமே கலந்துரையாடப்பட்டது. இதுபோன்ற பொய்யான மற்றும் போலியான அறிக்கைகளால் மனம் தளராமல், நமது நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்காக அவரின் அனைத்து முக்கிய பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்குமாறு, நான் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலுக்கு தனிப்பட்ட முறையில் அறிவித்திருக்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டளை மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால், தனது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பின்னரே, ஜனாதிபதி கட்டளையிட்டுள்ளார் என்றும் பிரதமர் அதற்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆளுநர் அஜிட் நிவாட் கப்ராலை நீக்குவது சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) நிபந்தனைகளில் ஒன்றாகும் என்றும், ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திக ளில் தெரிவிக்கப்பட்டது. மேலும், அஜிட் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்து கொண்டதன் பின்னர், இன்றேல், நீக்கப்பட்டதன் பின்னர் ஏற்படும் வெற்றிடத்துக்கு நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல நியமிக்கப்படக்கூடும் என்றும் செய்தி வெளியாகியதையடுத்தே, ஜனாதிபதியால் மேற்குறிப்பட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்புக்கு முன்னுரிமை



விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பல பகுதிகளில் நீண்ட வரிசைகள் தொடர்வதாகக் குறிப்பிட்ட அவர், அனைத்து பௌசர்களும் செவ்வாய்க்கிழமை முதல் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்துடன், நேற்று (17) முதல் அந்த பவுசர்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன என்று குறிப்பிட்டார்.

இதன்மூலம் கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் நேற்று பிற்பகலுக்குள் நிறைவடையும் என அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் தலா ஒரு பவுசர் டீசல் மற்றும் பெற்றோலை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டீசல் கப்பலையும் இன்று (18) விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கரைக்கு வந்த எரிவாயுவை

கடந்த 12 நாட்களாக நங்கூரமிடப்பட்டுள்ள இரண்டு கப்பல்களுக்கும் 8 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்ட போதிலும், லிட்ரோ நிறுவனம் செலுத்த வேண்டிய 6 மில்லியன் டொலர் கடனை செலுத்தும் வரை எரிவாயுவை விடுவிக்க முடியாது என வெளிநாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக, இரண்டு எரிவாயு கப்பல்களில் இருந்தும் எரிவாயுவை இறக்கும் பணி ஆரம்பிக்கப்படவில்லை எனவும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் லிட்ரோ நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிவாயு தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துக்கான டீசல் தட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் அறிவித்திருந்தன.

தேவையான டொலர்களைப் பெறுவதற்கான கடன் கடிதங்களைத் திறக்க முடியவில்லை என்று இரண்டு நிறுவனங்களும் தெரிவித்திருந்தபோதிலும், நேற்று முன்தினம் கடன்கடிதங்கள் திறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 3,500 மெற்றிக்தொன் எரிவாயு அடங்கிய கப்பலிலுள்ள எரிவாயுவை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக லிட்ரோ நிறுவனம், நேற்று மாலை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவமயமாக்கலுக்கு கடுமையான எதிர்ப்பு

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை நிறைவேற்றும் முயற்சிகளுக்கு எதிராக, தற்போதைய அரசாங்கத்திடம் இருந்து கல்வி முறையை பாதுகாப்பதற்காக ஒன்றிணைந்ததாக ஒன்றியத்தின் உறுப்பினர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் தெரிவித்தார்.

பல மாதங்களுக்கு முன்பே இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் முயயன்றதாகவும் கல்வி முறையை இராணுவமயமாக்குவதைத் தவிர்க்குமாறு அவர் அரசாங்கத்தை வலியுறுத்தினார். இந்த சட்டமூலம் தொடர்பில் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் பலர் பேச முற்பட்டபோதும், கல்விச் செயற்பாடுகளை ஜனநாயக முறைப்படி முன்னெடுக்குமாறும் பல்கலைக்கழக அமைப்பைப் பாதுகாக்குமாறும் கோரியபோது, அவர்கள் எதேச்சாதிகாரமாக கைது செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## முடிவுக்கு கொண்டு வர மரணச் சான்றிதழ்



அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், "காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான இலங்கையின் பரிந்துரையை நாங்கள் நிராகரிக்கிறோம். காணாமல் ஆக்கப்பட்டவர்க்கு ஒரு இலட்சம் ரூபாயும், மரண சான்றிதழும் வழங்குவதாக இலங்கை அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது.

"முதலாவதாக, ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா அமர்வில் அவர்களைக் காப்பாற்றுவதற்கான சமீபத்திய பரிந்துரை காரணமாக இருந்தது. OMP தோல்வியடைந்த பிறகு, இது தமிழர்களையும் ஐ.நாவையும் ஏமாற்றும் மற்றொரு செயலாகும். இது பயனற்ற சலுகை. அதை நாங்கள் ஏற்கப் போவதில்லை.

"எனது மகள் எங்கே இருக்கிறார் என்பது முன்னாள் ஜனாதிபதி சிறிசேனாவுக்கு தெரியும் என்பதால் எனக்கு இது தேவையில்லை. சிறிசேனா எனது மகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சில தமிழ்க் குழந்தைகளுடன் படம் எடுத்ததால், அந்த படத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம், அந்த படம் இங்கே எங்கள் சாவடியில் உள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் சாகவில்லை.

"சரணடைந்தவர்களில் சிலர் இராணுவத்தால் கொல்லப்பட்டதை நாம் அறிவோம். இது சனல் 4 வீடியோவில் இருந்தது. முன்னாள் அமெரிக்க தூதுவர் ராபர்ட் பிளேக்கின் கூற்றுப்படி, அவர்களில் பலர் அடிமைத் தொழிலாளிகளாகவும் சிலர் பாலியல் அடிமைகளாகவும் சில வெளிநாடுகளுக்கு சிங்களவர்கள் மற்றும் தமிழ் துணை இராணுவக் குழுவால் விற்கப்பட்டனர்.

"இந்தச் சிறுவர்களில் சிலர் இலங்கையில் சிங்களவர்களை போலவும், சில சிறுவர்கள் மலேசியா, மாலைதீவுகள் மற்றும் முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்றனர் என்றும் எமக்குத் தெரியும்.

"எனவே, மரணச் சான்றிதழ் என்ற கருத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை தேடுவதை நிறுத்திவிட்டு, எங்களது தொடர் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவே இந்த மரணச் சான்றிதழ் யோசனை. காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை தேடும் பணியை அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் கைப்பற்றியவுடன் போராட்டத்தை நாம் நிறுத்துவோம்" என்றனர்.

## காலியில் சுமந்திரன், சாணக்கியன்

இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் பங்கேற்றிருந்தனர். அத்துடன் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

## "பிக்-பொக்கெட் அரசாங்கம்"

நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய சிறிய அளவிலான இறக்குமதி போதுமானதாக இருக்காது என்றும், மொபைல் ரீலோட் முறையின்படி நாடு செயல்பட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 98 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் ஒரு லீற்றர் டீசல் 126 ரூபாய்க்கும், ஒரு லீற்றர் பெற்றோல் 130 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும்**

நிலையான திட்டம் மற்றும் வேலைத்திட்டத்துக்கு அழைப்பு விடுத்த அவர், பொதுமக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராட முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்



## ஐ.எம்.எஃப்பின் ஆதரவை தாமதப்படுத்தியது ஏன்?

தனது பேஸ்புக் பக்கத்திலேயே இந்தக் கேள்வியை எழுப்பிய அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது,

இலங்கையின் வருடாந்த கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் மற்றும் பிறவற்றை செலுத்துவதற்கான வழியை தேடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது என்று ஜனாதிபதி, புதன்கிழமை (16) இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலின் பின்னர், நன்மை தீமைகளை ஆராய்ந்த பின்னர் அவர்களுடன் இணைந்து பணியாற்ற தீர்மானித்ததாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு ஒரு நேர்மறையான நடவடிக்கையாக இருந்தால், தற்போதைய சிரமங்களைத் தணிக்க நிதியத்தின் ஆதரவை முன்னரே நாடியிருக்க வேண்டும் என்றார்.

இவ்வாறானதொரு நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் பிரபல்யத்தை பெற்றுக்கொள்வதற்காக 600 பில்லியன் ரூபாய் பெறுமதியான வரிச்சலுகைகள் வழங்கப்படுவது ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரூபாயை செயற்கையான முறையில் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதில் தாமதம்

## கொரோனாவை அதிகரிக்கும்

கடைப்பிடித்து போராட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்தப்பட வேண்டும் என சங்கத்தின் ஊடக குழு உறுப்பினர் டொக்டர் ருவன் ஜயசூரிய தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளில் மக்கள் கூடுவதும் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அபாயத்தை ஏற்படுத்தும் எனவும் தற்போது கொரோனா தொற்றுகள் குறைந்துள்ள நிலையில், இலங்கையும் உலகமும் இன்னும் வைரஸின் அச்சுறுத்தலைக் கடக்கவில்லை என்றார்.

எனவே, மேலும் கொரோனா வைரஸ் மாறுபாடுகள் வெளிவரக்கூடும் என்பதால், பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் தெரிவித்தோர்.

பொதுமக்கள் தங்கள் காலாவதி திகதிக்கு முன்னதாக தடுப்பூசிகளைப் பெற

**இலங்கையால் இறக்குமதி செய்ய முடியாது எனவும் எனவே, பொதுமக்கள் தங்களுக்கு தடுப்பூசி போடுவதை உறுதிசெய்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்**

வேண்டும் என்றும் பல நபர்கள் இன்னும் பூஸ்டர் தடுப்பூசியை பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக எதிர்காலத்தில் தேவைப்படும் போது தடுப்பூசி டோஸ்களை இலங்கையால் இறக்குமதி செய்ய முடியாது எனவும் எனவே, பொதுமக்கள் தங்களுக்கு தடுப்பூசி போடுவதை உறுதிசெய்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# “இலங்கைக்கு டொலர்களை அனுப்பமாட்டோம்”



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவால் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைக்கு, மாற்றத்துக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கான அமைப்பு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

நாடு பாரதூரமான பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வரும் நிலையில் நாட்டின் ஜனாதிபதி என்கிற நிலையில் உள்ளவர் இன்னும் கூடுதலான பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் உரையில் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு அவர் பொறுப்பு இல்லை என்பது போலவே கருத்து தெரிவிக்கப்பட்டிருந்ததோடு, நாட்டின் தற்பொதைய நிலைமைக்கு வேறு காரணம் என்பது போலவும் வெளிநாட்டு நிலைமையே காரணம் என்பது போலவும் ஜனாதிபதி உரையாற்றி இருந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்காற்றிவரும் வெளிநாட்டு பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களும் மற்றும் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வரிசை நிற்பதாகவும் இதற்கு ஜனாதிபதியே பொறுப்பு எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து தாங்கள் சிரமப்பட்டு அனுப்பும் டொலர்களில், நாட்டின் ஆட்சியாளர்கள் ஊழல் மோசடியில் ஈடுபடுகிறார்கள். எனவே இந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்து விலகும் வரையில் வெளிநாட்டில் இருந்து டொலர்களை அனுப்பப் போவதில்லை எனவும் அந்த அமைப்பு திட்டவட்டமாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மூடுவிழா

■ ஷாஜஹான்



நீர்கொழும்பு நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் மற்றும்

பெட்ரோல் இல்லாமையால் பொரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் நீர்கொழும்பு நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலும் டீசலும் நேற்று (17) காலை முதல் விநியோகிக்கப்பட்டது.

நீண்ட வரிசையில் வாகனங்கள் எரிபொருளுக்காக காத்துநின்றதால்,

வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. போக்குவரத்து பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக கடும் பிரயத்தனப்பட்டதையும் காணமுடிந்தது.

எரிபொருளுக்காக நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் நின்றதால் பதற்றமான நிலைமையும் அவ்வப்போது ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முழுமையான அறிக்கையை வெளியிட எதிர்பார்க்கிறோம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை மற்றும் அத்தாக்குதல் தொடர்பில் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான அறிக்கையை விரைவில் வெளியிடப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் (16) நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி. எல் பீரிஸ் மே ற்கண்டவாறு தெரிவித்தார்.

# எரிபொருள் கப்பல் 4 நாள்களாகக் கடலில் மிதக்கிறது

இலங்கைக்கு எரிபொருளை ஏற்றிக் கொண்டு வந்த கப்பலை, துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியவில்லை என்பதால், கடந்த நான்கு நாள்களாக அக்கப்பல் துறைமுகத்தில் தரித்து நிற்பதாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கப்பலில் 20 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருள் இருப்பதாகவும், இக்கப்பலை விடுவிக்கத் தேவையான 50 மில்லியன் டொலரைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல்லுக்கான தாமதக் கட்டணமாக நாளொன்றுக்கு 19 ஆயிரம் டொலர் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் இக்கப்பல் தொடர்ந்து துறைமுகத்தில் தரித்து நின்றால், அதிகளவான கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருள் இன்மையால் தரித்து நிற்கும் படகுகள்






■ துசித குமார டி சில்வா

பேருவளை – மரதான மீன்பிடித் துறைமுகத்தில் நாளாந்தம் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் படகுகள், எரிபொருள் இன்மையால் துறைமுகத்திலேயே தரித்து நிற்பதை படங்களில் காணலாம்.

# ஹொட்டல் உணவுகள் இனி இல்லை

காஸ் இல்லை என்பதால் சிற்றுண்டிச்சாலை வியாபாரம் முழுமையாக முடங்கியுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

காஸ் விநியோகங்களைத் தற்காலிகமாக, முழுமையாக இடை நிறுத்துவதற்கு காஸ் நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. தொடர்ந்து சிற்றுண்டிச்சாலைக்கு இந்த மோசமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிற்றுண்டிச்சாலைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளதால், சிற்றுண்டிச்சாலைகளில் வே லை செய் து வந்த ஐந்து இலட்சம் பேர் தங்களது வேலைகளை இழந்துள்ளதாகவும் இதற்கு அரசாங்கம் விரைவான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்காவிட்டால் வெ ற்று சிலிண்டர்களைச் சுமந்துகொண்டு வீதியில் போராடுவோம் எனவும் அச்சங்கம் எச்சரித்துள்ளது.

சிற்றுண்டிச்சாலைக்கு நாளாந்தம் இரண்டு அல்லது மூன்று சிலிண்டர்கள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கும் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசல சம்பத், காஸ் சிலிண்டர்கள் இல்லை என்பதால், சிற்றுண்டிச்சாலைகளை முழுமையாக மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.




# சந்திப்பு...

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியாவின் மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஸ்ரீ ராஜ்குமார் சிங்கை, புதுடெல்லியில் நேற்று (17) சந்தித்தார்.

# திருக்கோணேஸ்வர தொன்மையும் வரலாறும்

**இன்று கொடியேற்றம்; 3 இல் இரதோற்சவம்**



செல்வி வி.இ.நே. ஞானபாரதி (MA, MFA)



இலங்கையில் கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்ற தொன்மை மிக்க திருத்தலம் திருக்கோணேஸ்வரம் ஆகும். மூன்று பக்கங்களும் மலைகளால் சூழப்பட்ட திரி கோணத்தில் அமைந்துள்ள கோவில் என்பதால்‘ திருக்கோணேஸ்வரம்’ என்னும் பெயரை இத்தலம் பெற்றுள்ளது.

கால ஓட்டத்தில், பல தடவைகள் பல அழிவுகளை இத்தலம் கண்டிருந்த போதும், பலரது விடாமுயற்சிகளால் இன்றும் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்குகின்றது.

அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப்பெருமானின் பங்குனி உத்தர மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று (18) ஆரம்பம்,

இன்று (18) காலை 10 மணிக்கு கொடியேற்றம்
ஏப்ரல் 03 இரதோற்சவம்
ஏப்ரல் 04 தீத்தோற்சவம்
ஏப்ரல் 05 திருப்பூங்காவனம்
ஏப்ரல் 06 தெற்போற்சவம்

## புராண வரலாறு

வட, தென் தொல் இலக்கியங்களும் புராணங்களும் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளன. வாயு பகவானுக்கும் ஆதிசேடனுக்கும் இடையே நிகழ்ந்த போரின் விளைவில் உண்டான தலம் என்றும் தேவர்களின் கணைகளைக் காக்க விஷ்ணுபகவான் மச்ச அவதாரம் எடுத்த வரலாற்றைக் கூறுவதால் ‘மச்சேஸ்வரம்’ என்றும் கூறப்படுகிறது.

வாயுபகவான் வசந்த ருதுவாகிய சித்திரை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை பூரண திதி அந்த நவக்கிரகம் விருத்த யோகம், பத்திர கரணம் கூடிய சுபதினத்தில் குரு ஒரு கரையிலே சனி முதலிய கிரகங்கள் மகர முதலிய ஆட்சி ராசிகளில் இருக்க, விட லக்கினத்தில் சிவபெருமான் எழுந்தருளிய திரிகோண சிகரத்தை எடுத்துவந்து திரிகூட பருவத்துக்கு முப்பது யோசனை தூரத்தில் சமுத்திரக் கரையில் இட்டனன். இவை தான் அன்று முதல் தக்ஷிண கயிலாயம் எனவும் திரிகோணமலை எனவும் பெயர் பெற்றது.

லெமூரியாக் கண்டத்தின் பேரழிவுக்கு முன் இந்தியாவும் இலங்கையும் குமரிக்கண்டத்தின் ஒரு நிலப்பகுதியாக இருந்திருக்க கூடும். இங்கு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் ஆவர். இவர்களின் பண்பாடு இந்தியாவிலும் ஈழத்திலும் சிவாலயங்கள் எழக் காரணமாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறு தோற்றம் பெற்றதுதான் திருக்கோணேஸ்வரம் ஆகும்.

குமரிக்கண்டத்தின் பேரழிவினால் இப்போதுள்ள இலங்கையின் பெரும்பகுதி கடலில் மூழ்கியபோது, குன்றுகளின் தொடரில் இருந்த காலத்தால் முந்திய கோணேஸ்வர சிவாலயமும் மூழ்கி இருக்கக்கூடும். கோணேசர் மலையடிவாரத்தில் உள்ள கடலில் காணப்படும் கோயில் தளம், தூண்கள், இடிபாடுகள் என்பன இதனை நிரூபிக்கின்றன.

## சரித்திர தொடர்பு

இராவணன் சாம வேதத்தை இன்னிசையுன் பாடி, இறைவனை மகிழ்வித்து தன் பாவத்திலிருந்து மீண்டான் என்றும், இதன் போது சிவனிடம் ஒரு லிங்கமும் பெற்றான் என்றும், அச் சிவலிங்கமே திருக்கோணேசர் தல லிங்கம் என்றும் கூறப்படுகிறது.

மேலும், இராவணனை வதம் செய்த இராமர் தன் ப்ரமஹத்தி தோஷம் நீங்க திருக்கோணேஸ்வரத்தில் நீராடி வழிபாடு செய்தார் என்றும் செவி வழி செய்தி கூறுகிறது. மற்றும் மகாவம்சத்தின் கதைகளுக்கு அமைய மகாசேனன் திருக்கோணேசர் கோவிலை இடித்ததன் விளைவாக கண்களை இழந்தான் என்றும் அறிய முடிகிறது.

மேலும், 1944ஆம் ஆண்டு இரண்டு பல்லவ சிற்பங்கள் மண்ணில் புதைந்திருந்து எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட விஷ்ணு, இலக்குமி சிலைகளிலும் பல்லவர் கால தொடர்பு கண்டறியப்பட்டுள்ளது.

## குளக்கோட்டு மன்னனின் திருப்பணிகள்

குளக்கோட்டன் பற்றிய செய்திகளை கோணேசர் கல்வெட்டு, தெட்சண கைலாய புராணம், திருக்கோணேசர வைபவம், மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாண வைபவ மாலை முதலியன எடுத்து இயம்புகின்றது.

குளக்கோட்ட மன்னன் காலம் குறிப்பாக அறியப்படாமையால் திருக்கோணேச்சர திருத்தலத்தை அவன் கட்டி இருக்கலாம் என எண்ணுதல் தவறு. கி.பி 5ம் நூற்றாண்டில் அழியும் பொருட்களால் கட்டப்பட்ட இக்கோவிலை கி.பி 12ஆம் நூற்றாண்டில் குளக்கோட்டன் திருத்தி அமைத்துத் திருப்பணிகளை செய்து இருக்கலாம்.

திருக்கோணேசர் தலத்துக்கு பற்பல திருப்பணிகளை குளக்கோட்டன் செய்தது மட்டுமல்லாது, கோவில் நிர்வாகம் சார்ந்த விடயங்களுக்குத் தனித்தனியே ஆட்களை நியமித்தும், நித்திய, நைமித்திய பூசைகளுக்கும் சட்ட திட்டங்களை உருவாக்கினான்.

அது மட்டுமல்லாது, கோணைநாதருக்கு திருக்குளம் கட்ட விருப்பம் கொண்டு, காலத்தால் அழியாத செல்வமாகிய கந்தளாய் குளத்தை அமைத்ததோடு அதிலிருந்து மருத நிலங்கள் செழிக்க செய்திருந்தான். தன் பணிகளை செவ்வனே செய்து முடித்த மன்னன் ‘விதேகமுக்தி’ கிடைத்து, இறைவனுடன் திருக்கோணேச தலத்திலேயே கோணலிங்கப் பெருமானோடு இரண்டறக்கலந்தான்.

## பண்டைய கோவில்

இன்று மலையின் உச்சியில் சோமாஸ்கந்தரின் பெரிய திருவுருவத்துடன் மிளிர்ந்து கொண்டிருக்கும் திருக்கோணேஸ்வர கோவிலமைப்பு ஆதியிலே இவ்வாறன்று. ஒப்பீட்டளவில் பரந்த கோவிலாக பண்டைய திருக்கோணேஸ்வரம் இருந்துள்ளது. மற்றும் மலையடிவாரத்திலிருந்து மேலே செல்லும் வழியில் மூன்று கோவில்கள் இருந்துள்ளமையும் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

கொன்ஸ்டன் டீசாவின் மகன் ஜோறொட்றிகே டிசா 1679இல் வெளியிட்ட நூலில் ‘மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்கும் இடத்திலிருந்து ஒரு பகோடாவும் மற்றயது செங்குத்தான பாதையின் மத்தியிலும், மிகவும் சிறப்பு வாய்ந்த (பகோடா) உச்சியிலும் இருந்தது’ என குறிப்பிட்டுள்ளார்.

தென்திசையில் மாதுமை அம்பாளின் பிரமாண்டமான கோவி0ல் இருந்துள்ளது. கோவிலின் வடகிழக்கே நீள்சதுர வடிவிலான கருங்கற்களினாலான கடல் மட்டத்திற்கு கீழ் ஆழமுடையதான பாவநாச தீர்த்த கேணி ஒன்றும் இருந்துள்ளது. சுவாமி தீர்த்தமாடுவதற்கும், மும் மூர்த்திகளின் அபிஷேகத்துக்குமாக பாவநாச கிணறு ஒன்றும் தனியாக அமைக்கப்பட்டு இருந்தன. இக் கிணற்றில் தான் இன்று வரை பாவநாச தீர்த்தம் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையின் சற்று மேலே ஏறிச் செல்லும் போது கிழக்கு நோக்கி பிரமாண்டமான கோபுரத்தை உடையதாக மஹா லக்ஷ்மி சமேத நாராயணமூர்த்தியின் நாராயணர் கோவில் ஒன்று இருந்துள்ளது.

நாராயணர் கோவிலில் இருந்து வடக்கு பக்கமாக மேல் நோக்கி செல்லும் போது திருக்கோணேஸ்வர கோவில் அமையப்பெற்று இருந்தது. இவ்வாலயத்தின் கோபுரங்களில் பொறிக்கப்பட்டிருந்த இரத்தின மணிகள் தூரக்கடலில் செல்லும் மாலுமிகளுக்கு கலங்கரை விளக்கு போலத்தென்பட்டது என வரலாறுகள் கூறுகின்றன.

## போர்த்துக்கேயர் அழிப்பும் மீள் நிர்மாணமும்

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு போர்த்துக்கேயர் திருகோணமலையில் பலமான கோட்டை ஒன்றை அமைக்கத் தீர்மானித்தனர். கொன்ஸ்தந்தைன் டீசா 1624இல் கோவில் செல்வம் எல்லாம் கொள்ளையடித்ததோடு கோவிலையும் இடிக்கக் கட்டளை இட்டான். பாபநாச குளத்தையும் மூடி பின் கோவிலை இடித்து பெறப்பட்ட கற்களைக் கொண்டு முக்கோண வடிவிலான தம் கோட்டையை எழுப்பினர்.

போத்துக்கேயர் கோணேசர் கோயிலை அழிக்க வருவதையறிந்து கோவிலில் தொண்டாற்றிய அந்தணர்களும் அடியார்களும் கோவிலில் இருந்த விக்கிரகங்களை எடுத்துச் சென்று, நிலத்திலும் குளங்களிலும் வேறு பல இடங்களிலும் மறைத்து வைத்தனர். அவற்றில் சில பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்டு தற்போது உள்ள திருக்கோணேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக முன்னமே எதிர்வு கூறப்பட்டு, அது கல்லில் கல்வெட்டாக செதுக்கி வைக்கப்பட்டு இருந்திருக்கிறது. இக் கல் வெட்டு கூறும் செய்தி யாதெனில், முற்காலத்தில் குளக்கோட்டன் கட்டிய கோவிலை பிற்காலத்தில் பறங்கியர் இடிப்பார்கள். பின்னே இக்கோவிலைக் கட்டுவதற்கு வேந்தர்கள் யாரும் எண்ண மாட்டார்கள் என்பது பொருள் கொண்டு ஆராய்ந்துள்ளனர்.

இவ்வாறாக அழிக்கப்பட்ட இத்தலம், பலரது முயற்சிகளின் விளைவாக 450 வருடங்களின் பின் 1952இல் புனருத்தாரணம் செய்யப்பட்டது. 1963.03.03 மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மீண்டும் பிரசித்தி பெற்ற ஒரு தலமாக மாற்றம்பெற்றது.

அன்றிலிருந்து இன்றுவரை கோவில் பரிபாலன சபையால் சிறப்பாக பராமரிக்கப்பட்டு, பக்கர்களுக்கு அருள்பாலிக்கும் திருத்தலமாக திருக்கோணேஸ்வரம் திகழ்கின்றது.

“அரசனை நம்பி

# புருசனை கைவிட்ட நிலை”

■ கே.எல்.ரீ.யுதாஜித்



சமையல் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டமை நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயலாகுமென மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், அக்கட்சியின் பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், “இலங்கை மக்களின் சமையல் கலாசாரம் ஆரம்பத்தில் விறகு அடுப்புகளாக இருந்தது. அதன்பின்னர் உமி அடுப்பு, மண்ணெண்ணெய் அடுப்பு, மின்சார அடுப்பு என மக்களுக்கு பழக்கம் மாறுபட்டது. பின்னர் சமையல் எரிவாயு அடுப்பு அறிமுகம் செய்யப்பட்டபோது, அதனை நகர்புற மக்கள் மட்டுமன்றி கிராமப்புற மக்களும் இலகுவான பாவனையாக பயன்படுத்தும் பழக்கம் ஏற்பட்டது.

“வறுமை கோட்டில் வாழும் மக்களுக்கும் சமூர்த்தித் திட்டம் ஊடாக இலகு கடன் அடிப்படையில் எரிவாயு அடுப்புகளை பெற்று, அதனை கூடுதலான மக்கள் இன்று பாவித்து வருகின்றனர்.

“சாதாரண தேநீர் கடை தொடக்கம் ஐந்து நட்சத்திர உணவகங்கள் வரையும் எரிவாயுவைப் பயன்படுத்தியே சகல உணவு வகைகளும் செய்யப்படுகின்றன. உண்மையைக் கூறுவதானால் எரிவாயு என்பது இன்று ஓர் அத்தியாவசிய பொருளாகவே உள்ளது.

“விறகு அடுப்பை நம்பியிருந்த இலங்கை மக்களில், தற்போது 80 சதவீதமான மக்கள் எரிவாயு அடுப்பை பாவிக்கும் நிலையில், திடீரென விநியோகம் நிறுத்தப்பட்டமையை ஏற்கமுடியாது.

“இது அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலைபோன்றே இலங்கை மக்களுக்கு இந்த அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது” என்றார்.

இதேவேளை, நாட்டில் எரிவாயு விநியோகம் மீண்டும் வழமைக்குத் திரும்பும் என நேற்று (17) அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தை

# திசை திருப்ப முயற்சி

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளமையை வன்மையாக கண்டிப்பதோடு, 12 வருடங்களாக நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ளப் போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (17) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அன்று முதல் இன்று வரை எமக்கு நஷ்டஈடு தேவை இல்லை என்று நாங்கள் கூறி வருகிறோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் குறித்து எங்களுக்கு நீதி தான் தேவை. அரசாங்கம் தரும் நிதி தேவை இல்லை.

“இவ்வாறான சலுகைகளை தந்து, தாய்மார்களின் போராட்டத்தையும் ஏக்கங்களையும் திசை திருப்ப அரசாங்கம் முயற்சிக்கின்றது.

“நாட்டில் இன்று எத்தனையோ பிரச்சினைகள் தலை தூக்கி உள்ளன. ஒரு நேர உணவு உண்பதற்கு உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, டீசல், பெற்றோல் உட்பட எரிபொருள் தட்டுப்பாடு என இத்தனைக்கும் மத்தியில், ஒரு இறாத்தல் பாணின் விலை 130 ரூபாயாக உயர்ந்துள்ளது. மக்கள் இலங்கையில் வாழ்வதா அல்லது சாவதா என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

“இந்த நிலையில், அரசால் எவ்வாறு எமக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க முடியும்? சர்வதேச ரீதியில் மீண்டும் மீண்டும் கடன்களை பெறுவதற்காகவும் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை சார்ந்த இலங்கை விடயங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது.

“அதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒருபோதும் துணை போக மாட்டோம். நீங்கள் எமக்கு தருவதாகக் கூறிய ஒரு இலட்சம் ரூபாயை வைத்து தற்போது ஏற்பட்டிருக்கும் உணவுத் தட்டுப்பாடுகளையும் எரிபொருள் தட்டுப்பாடுகளையும் நிவர்த்தி செய்து, இலங்கையில் மக்கள் பட்டினி இல்லாமல் வாழ்வதற்கு உரிய வழிமுறைகளை செய்து கொடுங்கள்” என்றார்.



# தேர்த் திருவிழா

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் 10ஆம் நாள் திருவிழாவையொட்டி தேர்த் திருவிழா, நேற்று (17) நடைபெற்றது. இந்தத் தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். (படப்பிடிப்பு: தீஷான் அஹமட்)





கண் சத்திர சிகிச்சை

# உபகரணம் அன்பளிப்பு

■ சகா

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சை உபகரணம், அனைத்துலக மருத்துவ நல அமைப்பால் (IMHO)அன்பளிப்புச் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக கண் சத்திர சிகிச்சைக்காக கண் துல்லியமாக அளவிடும் டிஜிட்டல் இயந்திரம் இல்லாமையால் பல சிரமங்களை நோயாளிகள் எதிர்நோக்கிவந்தனர்.

இதனை கருத்தில்கொண்டு, கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் டொக்டர் என்.நிரோஷனின் வேண்டுகோளுக்கு இணங்க, கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா. முரளீஸ்வரனின் நீண்ட நாள் முயற்சியின் பயனாக, அனைத்துலக மருத்துவநல அமைப்பிலிருந்து 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான கண் வில்லை துல்லியமாக அளவிடும் டிஜிட்டல் இயந்திரம் கிடைக்கப் பெற்றது.

இதனை அனைத்துலக மருத்துவநல அமைப்பு (அமெரிக்கா) சார்பாக இருதய நோய் வைத்திய நிபுணர் டொக்டர் அருள்நிதி, வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா. முரளீஸ்வரனிடம் கையளித்தார்.

# பெண் முயற்சியாளர் கௌரவிக்கப்பட்டார்



■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

நாவிதன்வெளி பிரதேச செயலகம், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரிவு பிரதேச மட்ட மகளிர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விற்பனை கண்காட்சி மற்றும் பெண் சுய தொழில் முயற்சியாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு என்பன, நாவிதன்வெளி பிரதேச கலாசார மத்திய நிலையத்தில், பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

இதன்போது, ‘நிலையான எதிர்காலத்துக்காக பால்நிலை சமத்துவம் பேணல்’ எனும் தொனிப்பொருளில், விழிப்பூட்டல் ஊர்வலம் இடம்பெற்றதுடன், பெண் சுய தொழில் முயற்சியாளர்களின் விற்பனை கண்காட்சிக் கூடங்களை அதிதிகள் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் முயற்சியாளராக தெரிவுசெய்யப்பட்டு, கொழும்பில் வைத்துக் கௌரவிக்கப்பட்ட நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி யூ. நஸ்லியா அதிகாரிகளால் நினைவுச்சின்னம், பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வுக்கு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட தர நிர்ணய நிலையப் பணிப்பாளர், தாவரவியல் பேராசிரியர் எம்.ஐ.எஸ்.சபீனா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் கலந்துகொண்டார்.



வளங்கள் சார்ந்த

# முரண்பாடுகளுக்கு தீர்வு காணுதல்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், கே.எல்.ரீ.யுதாஜித், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை வளங்கள் சார்ந்த முரண்பாடுகளை அடையாளப்படுத்தி, அவற்றிற்கான தீர்வுகளை காண்பதற்கான கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (16)நடைபெற்றது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட உயர் அதிகாரிகளும் பன்நாட்டு இயற்கை பாதுகாப்பு சங்கமும் இணைந்து வரலாற்று ரீதியான மற்றும் புவிச்சரிதவியல் பிரதேசங்களை வரைபடமாக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.



# யாழ் /அல்வாய் சின்னத்தம்பி வித்தியலாயம் சிறந்த பெறுபேறு

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறு பேற்றின்படி யாழ் /அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தை சேர்ந்த நான்கு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ள நிலையில் மொத்தமாக ஆறு மாணவர்கள் சித்தியடைந்து வடமராட்சி விகிதாசாரத்தில் பாடசாலை முன்னிலை பெற்றுள்ளது.

மாணவர்களான த. தர்மிகன்- 167, தீ.மகிஷா- 155, ரா.பர்மிகா- 155, பா. அபர்ணா- 153 என்ற அடிப்படையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ள நிலையில், பி.பிரதீபா- 141, மு.வர்ஷன்- 116 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்திபெற்ற மாணவர்களுடன் அதிபர் கி. சிறிகந்தராசா, வகுப்பாசிரியை அனுசியா பரணிதரன், ஆரம்ப பிரிவு ஆசிரியர்களையும் காணலாம்.



குருபூசை தினமும்

# ஊடகவியலாளர் கௌரவிப்பும்

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 115ஆவது குருபூசை தினமும், ஊடகவியலாளர் சி.தில்லைநாதன் கௌரவிப்பு நிகழ்வும் சதாவதானி சன சமூக நிலையத்தில், நேற்று முன்தினம் (16) மாலை நடைபெற்றது.

மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை சன சமூக நிலையத் தலைவர் நடராசா நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வே.வேல்நந்தன் உரை நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து 54 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகப் பணியாற்றிய ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் மலர் மாலை அணிவிக்கப்பட்டும், பொன்னாடை போர்த்தியும் நினைவு பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சன சமூக நிலைய நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்பள்ளி சமூகம், மேலைப்புலோலி கிராம மக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.



# எம் இனத்தின் இருப்பு கேள்விக்குறி

## அதள பாதாளத்தில் பொருளாதாரம்



எம் இனத்தின் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு, பூநகரியில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், “இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் போகமாட்டோம் என்று மார்தட்டினார்கள். இன்று சர்வதேச நாணய நிதியத்தின் காலடியில் வீழ்ந்து இருக்கிறார்கள்.

“நாட்டில் எரிபொருள் எரிவாயு என அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் மக்கள் வரிசையில் நின்று தான் வாங்க வேண்டும் என்கிற நிலை இப்போது உருவாகியிருக்கிறது. பொருளாதாரம் அதள பாதாளத்துக்குச் சென்றுள்ளது.

“இவ்வாறான இக்கட்டான நேரத்திலும் எம் இனத்தின் வாழ்க்கை என்பது அழிக்கப்பட்டுக்கொண்டே செல்கிறது. எங்களை நோக்கி புத்த கோவில்கள் வருகின்றன. எங்கள் இடங்களில் கொரோனாக் காலங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் பயணத் தடைகளின் போது முளைத்த இராணுவ சோதனைச் சாவடிகள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன.

“வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றன தமிழர்களின் நிலங்களைப் பறித்து விவசாயம் செய்வதற்குத் தடையாக இருக்கிறார்கள். முழுமையாக ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட இராணுவ நியமனங்களால்தான் நாடு இன்று இவ்வாறான அழிவைச் சந்தித்துள்ளது” என்றார்.

# தந்தைக்கு விளக்கமறியல்

■ செந்தூரன் பிரதீபன்

தனது மகனை மதுபோதையில் தாக்கிய தந்தைக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதித்து, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் கே.அரியநாயகம், நேற்று முன்தினம் (16) தீர்ப்பு வழங்கினார்.

திருநெல்வேலி, பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய தந்தைக்கே இவ்வாறு சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. மது போதையில் வீட்டுக்கு வந்து 16 வயதுடைய தனது மகனை தாக்கியுள்ளார் என கோப்பாய் பொலிஸாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. காயங்களுக்கு உள்ளான மகன், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், ஹட்டன், புனித கப்ரியல் மகளிர் கல்லூரி மாணவி, 152 புள்ளிகளைப் பெற்று சித்திப்பெற்றுள்ளார். இவர், கொட்டகலையைச் சேர்ந்த சசிகுமார்- மதிவதனி தம்பதிகளின் புதல்வியாவார். இவர், பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் தனது திறமைகளைக் காண்பித்துள்ளார்.



நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஹோல்புறுக் ஆரம்பப் பாடசாலையில், நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 12 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திப்பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி புஸ்பநீலா தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், சந்திரகுமார் தாருகேசஷன் -175, முருகானந்தன் ரபிஷன் -171, ஜெகதீஸ்வரன் ரித்திகா- 170, பாலசுப்ரமணியம் திவிஷான் -165, குழந்தைவேல் சன்ஜித்- 164, மொஹமட் ரிஸ்வான் பாத்திமா ருஷ்தா -159, சிவஞானம் சுராஜ்- 158, போல் சந்திரகாந் லியோன் எந்தனி- 158, மொஹமட் பாஷீர் அம்மார் -156, மொஹமட் ஜிப்ரி பாத்திமா ஷாயிதா -152, கிருஷ்ணகுமார் ஸிலக்ஷனா -151, நவநீதகேசன் ஹரிஹரப்பிரியன் -148 புள்ளிகளை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான கே. பிரசன்னன், கே. சத்தியசீலன் ஆகியோருக்கும் அதிபர் திருமதி எஸ் புஷ்பநீலா தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

(துவாரகஷான்)

களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிகஷ்ட பிரதேச பாடசாலையான, குடாகங்க தமிழ் வித்தியாலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிவாஜிகணேசன் டிஷானி 183 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



(பி. கேதீஸ்)



மடுல்சீமை, ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஜி. ரக்‌ஷனா - 155, டி.ருக்‌ஷன் - 161 ஆகியோர் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். மாணவர்களுடன், வகுப்பாசிரியர் வி.விக்னேஷ்வரன், அதிபர் என். லிங்கராஜா படங்களில் காணப்படுகின்றனர்.

## சிறிய உலக முடிவு பகுதியை

# மேம்படுத்த நடவடிக்கை

■ சுமணசிறி குணதிலக

மடுல்சீமை, ரோபரிவத்த சிறிய உலக முடிவைப் பார்வையிட வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில், அப்பகுதியில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊவா மாகாண சபை தெரிவித்துள்ளது.

அது தொடர்பான கலந்துரையாடல் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில், நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

உலக வங்கியின் பிரதேச அபிவிருத்தி திட்ட நிதியுதவியின் கீழ், இந்த அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

**“ வீதிகள் புனரமைப்பு செய்யப்பட உள்ளதுடன், குடிநீர் வசதிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கு மேலதிகமாக வாகன தரிப்பிடம், சிறிய வர்த்தக நிலையங்கள் என்பனவும் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது**

இதற்கமைய, குறித்த சிறிய உலக முடிவை பார்வையிட வருபவர்கள் பயன்படுத்தும் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட உள்ளதுடன்,குடிநீர் வசதிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கு மேலதிகமாக வாகன தரிப்பிடம், சிறிய வர்த்தக நிலையங்கள் என்பனவும் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.






# கொழுந்து பறிக்கும் போட்டி

டிக்கோயா இன்ஜஸ்ரி (கிருமகொல) தோட்ட முகாமைத்துவத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி, தோட்ட முகாமையாளர் ரஜித்ர ஞானசேகரன் தலைமையில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது. இதில் இன்ஜஸ்ரி கீழ் பிரிவு, இன்ஜஸ்ரி மேல் பிரிவு, போற்றீ, ஹென்ஸி, பாத்போட், பிலிங்போனி ஆகிய தோட்டங்களிலிருந்து இருந்து 24 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.




## ரயிலில் தவறி விழுந்து

# வெளிநாட்டு பிரஜை பலி

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

கொழும்பிலிருந்து பதுளை வரை பயணித்த உடரட்ட மெனிகே ரயிலிலிருந்து தவறி விழுந்து எகிப்து நாட்டு சுற்றுலாப் பயணி உயிரிழந்துள்ளார். 32 வயதான அஹமட் மொஹமட் அப்துல் ஹமீட் என்ற சுற்றுலாப் பயணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பட்டிபொல ரயில் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் (16) தவறி விழுந்த இவர், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அன்றிரவே உயிரிழந்துள்ளார் என பட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றுலாப் பயணி, கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளதுடன், நேற்று முன்தினம் (16) பகல் 12 மணியளவில் இவ்வாறு ரயிலிலிருந்து தவறி விழுந்துள்ளார்.

இதனையடுத்து காயங்களுடன் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அவரது நிலைமை மோசமடைந்ததை அடுத்து,அவருடன் வருகை தந்த அவரது நண்பரால், காயமடைந்த சுற்றுலாப் பயணி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜேர்மன் பிரஜைகளின் பயணப்பை

# அவரிடமே ஒப்படைப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன



எல்ல ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு வரை பயணிக்கும் ரயிலில் பயணித்த ஜேர்மன் பிரஜை, மறந்துவிட்டுச் சென்ற 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான மடிகணினி மற்றும் பெறுமதியான பொருட்கள் அடங்கிய பயணப்பையை, அதன் உரிமையாளரிடமே கண்டி சுற்றுலா பொலிஸார் கையளிக்க நடவடிக்கை எடுத்தனர்.

பயணப்பையை தவறவிட்ட குறித்த ஜேர்மன் நாட்டவர், எல்ல ரயில் நிலையத்திலிருந்து நானுஓயாவுக்கு ரயிலில் பயணித்த போது, தமது பெறுமதியான பொருட்கள் அடங்கிய பயணப்பையை ரயிலில் தவறவிட்டு சென்றுள்ளார்.

இது தொடர்பில் நானுஓயாவில் தாம் தங்கியிருந்த ஹோட்டல் உரிமையாளரிடம் தெரிவித்ததுடன், ஹோட்டல் உரிமையாளர் கண்டி சுற்றுலா பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜேர்மன் நாட்டவர் பயணித்த ரயில், நாவலப்பிட்டி ரயில் நிலையத்தை அண்மித்த போது, நாவலப்பிட்டி ரயில் நிலைய அதிபரை இந்த விடயம் குறித்து அறிவுறுத்தியதையடுத்து, அங்கு ரயிலை சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பயணப்பை கண்டு பிடிக்கப்பட்டு, கண்டி சுற்றுலா பொலிஸார் மூலம் ஜேர்மன் நாட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டது.



## எரிபொருள் பிரச்சினையைத் தீர்க்குமாறு

# காளியிடம் மன்றாட்டம்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த பலர், சமையல் எரிவாயு மற்றும் எரிபொருளைக் கோரி, நேற்று முன்தினம் (16) தலவாக்கலை, ஹொலிரூட் தோட்டத்திலுள்ள காளி கோவிலில், சிதறுதேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அசோக சேபாலவால் சிதறுதேங்காய் உடைக்கும் வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வெற்று சிலிண்டர், எரிபொருள் கொள்கலன்களை காளி கோவிலுக்குக் கொண்டு சென்ற இவர்கள், சூடம் ஏற்றி சிதறு தேங்காயையும் உடைத்துள்ளனர்.

# ஆத்தளையில் மகளிர் சங்கம்

■ மெய்யன்

கண்டி, பன்வில, ஆத்தளை தோட்டத்தில் பெண்கள் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மகளிர் சங்கம் முதல் தடவையாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு க/வத்/ஆத்தளை தமிழ் வித்தியாலயத்தில் சனிக்கிழமை (19) முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

பன்விலை பிரதேச சபை உறுப்பினர் செல்லமுத்துப்பிள்ளை சுரேஷ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கண்டி மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் (HDO) பணிப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

‘யாழினி’ என்ற பெயரில் ஸ்தாபிக்கப்படவுள்ள இவ்வமைப்பின் மூலம், தோட்டப்புறப் பெண்களின் சுயதொழில் முயற்சிகள், பெண்கள் உரிமைகள் தொடர்பான சட்ட ரீதியான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர் செல்லமுத்துப்பிள்ளை சுரேஷ்குமார் தெரிவித்தார்.

## கேகாலையில்

# உருளைக்கிழங்கு செய்கை வெற்றி

■ என்.ஆராச்சி

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ், கேகாலை மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் உருளைக்கிழங்கு செய்கை பரீட்சார்த்த முயற்சி முன்னெடுக்கப்பட்டதாக கேகாலை பிரதி விவசாய பணிப்பாளர் நிர்மா ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, புளத்கொஹூபிட்டிய, அரநாயக்க, யட்டியாந்தோட்டை, தெரணியகலை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றார்.

குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளில் 4 ஹெக்டயர் பரப்பில் உருளைக்கிழங்கு செய்கைக்காக 900 கிலோ கிராம் விதை கிழங்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும், புளத்கொஹூபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட பரீட்சார்த்த உருளைக்கிழங்கு உற்பத்தியானது, சிறந்த விளைச்சலை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நிர்வாணமாகத் தொங்கிய சடலம் மீட்பு

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹோர்டன் சமவெளி அமைந்துள்ள காட்டுப் பகுதியில் உள்ள மரமொன்றில், நிர்வாணமாக தொங்கிய சடலமொன்று பட்டிபொல பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (16) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற நபர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் யார் என்பது குறித்து இதுவரை உறுதிப்படுத்தவில்லை என தெரிவித்த பொலிஸார், குறித்த நபர் தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கு முன்னர் மதுபானம் அருந்தியுள்ளதுடன், தான் அணிந்திருந்த சகல ஆடைகளையும் கழற்றி தீவைத்துக் கொளுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது என்றார்.



மேலும் அவ்வாறு தீ வைத்து எரியூட்டப்பட்ட ஆடைகளுக்கு மத்தியில் இராணுவத்தினரின் இலட்சினை பொறிக்கப்பட்ட ஆடையொன்றும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

10 அடி உயரமான குறித்த மரத்தில் வயர் ஒன்றைப் பயன்படுத்தி, தன்னுயிரை குறித்த நபர் மாய்த்துக் கொண்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக தெரிவித்துள்ள பொலிஸார், சடலத்தை பிரதேச பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தனர்.

# சாரதி ஆசனத்தில் 'அவ்வாறானவரை' அமரச் செய்தது சரியா?

எமது நாட்டில் மட்டுமன்றி, உலகநாடுகளில் இடம்பெறும் பாரிய விபத்துகளில் பெரும்பாலானவை சாரதியின் தவறால் இடம்பெற்றிருக்கும். எனினும், சாரதியின் மீது நேரடியாக குற்றஞ்சுமத்தாது, வாகனங்கள், வீதிகள், இயற்கை ஆகியவற்றின் மீது குற்றஞ்சுமத்தித் தப்பித்துக்கொள்வர். சில சந்தர்ப்பங்களில் எதிரே வந்த வாகனத்தின் மீதும் கையை நீட்டுவர். சிலவேளைகளில் அது உண்மையாகியும் விடும்.

சொந்தமாக வாகனத்தை வாங்கி பயில்வோரும் உள்ளனர், சாரதி பயிற்சி பாடசாலைக்குச் சென்று பயின்றவர்களும் இருப்பர். முறையான அனுமதிப்பத்திரம் இருக்காவிடினும், வாகனத்தைத் திறம்படச் செலுத்துவோரும் இருக்கத்தான் செய்கின்றனர். எனினும், ஒருவரைப் பலவந்தப்படுத்தி சாரதி ஆசனத்தில் அமரச்செய்தால், கட்டாயமாக விபத்து நடந்தே தீரும்.

அவ்வாறான விபத்துக்கள் அரசியலில் அதிகம். "உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன்" என்ற கூற்று, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவரை, சாரதி ஆசனத்தில் அமரச்செய்தமையை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த தவறைச் செய்தவர்கள் எதிர்காலங்களில் தெளிவாக இருக்கவேண்டும். இல்லையேல் மீண்டும், மீண்டும் பாரிய விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினம் (16) ஆற்றிய உரையின் சாரம்சத்தை பார்க்குமிடத்து, ஜனாதிபதித் தேர்தலில் விருப்பமின்றி இருந்தேன், நீங்கள்தான் என்னை பலவந்தமாக அழைத்துவந்துவிட்டீர்கள், ஆனாலும், நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பேன், நெருக்கடிக்கு நான், பொறுப்பல்ல எனக் கூறி நழுவிச்செல்வதாய் உள்ளது.

நாடு பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவ்வாறான தருணத்தில், நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரையில், ஒரு யதார்த்தம், அர்த்தபுருஷ்டி, அடுத்தகட்ட நகர்வுக்கான யோசனைகள், என்பவற்றை அச்சொட்டாக அடித்துக் கூறியிருக்கவேண்டும்.

அப்படி இருந்திருந்தால், துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள், இன்னும் பொறுமையைக் கடைப்பிடித்து, பயணத்துக்கு ஆதரவை நல்கியிருப்பர். எனினும், கடுமையான முடிவுகளை எடுக்க உறுதிபூண்டுள்ளதாகத் தெரிவித்து, "தேசிய பொருளாதார சபையை" கோடிட்டுக் காட்டியுள்ளார். எனினும், அதற்கான ஆலோசனைக் குழுவில் இருப்போரில் சிலர், பெரும் வர்த்தகம் செய்பவர்கள். அவ்வாறானவர்கள் எப்படி, சுதந்திரமான ஆலோசனைகளை வழங்குவர். ஜனாதிபதி கடந்த காலங்களில் எடுத்த கடுமையான முடிவுகள், கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டன. அரசாங்கத்தை விமர்சித்தவர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன. ஆனால், அரசாங்கத்துக்குள்ளே இருந்துகொண்டு இன்னும் பலரும் பகிரங்கமாகவே விமர்சனம் செய்துகொண்டுதான் இருக்கின்றனர். இங்கு, "கூட்டுப்பொறுப்பு" அப்பட்டமாகவே மீறப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கையில் இருப்பதால், அதிரடியான முடிவுகளை எடுக்கலாம். எனினும், நழுவல் போக்கே கடைப்பிடிக்கப்படுகின்றது. கட்டுப்பாட்டுக்கு அப்பால் சென்றுகொண்டிருக்கின்றது. நெருக்கடியை சமாளித்து முன்னரக வேண்டும். அனைத்து சுமைகளையும் மக்களின் மீது திணித்துவிடக்கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமின்றி, பிறிதொரு அரசாங்கம் ஆட்சி பீடத்தில் இருந்திருந்தாலும் முன்னைய அரசாங்கத்தையே விமர்சனம் செய்துகொண்டிருப்பர் என்பதை கவனத்திற்கொண்டு, இந்த நெருக்கடி.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

மனவலிமை உள்ளவர்களுக்கு நேரிய எண்ணங்களே அதிகரிக்கும். எதிர்மறையான கருத்துகள், பயஉணர்வு, திரிபான கருத்துகள், விரக்தியான எண்ணங்கள் எதுவுமே கிடையாதவர்களே வெற்றியாளர்கள்.

தகாத எண்ணங்களைச் சுட்டெரிக்கும் திறன், நேர்மறையான கருத்துடன் வாழ்பவர்களுக்கு கட்டாயம் இருக்கும். கண்டகண்ட விடயங்களுடன் நெஞ்சத்தைப் புண்பட வைக்கவும் மாட்டார்கள். என்றும் சுகதேகிகளாக, அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் நபர்களாகவே வாழ்வார்கள்.

எல்லா விடயங்களிலும் முரண்பாடாகப் பேசினால், சமூகம் இத்தகையவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டாது. நிரந்தர மகிழ்ச்சியுடன் வாழவும் சகலரையும் வளம் நிறைந்தவர்களாக மாற்றிடவும் துணிச்சலூட்டும் கலையைப் பயிற்றுவிக்கும் ஆசான்களாக மாற்றியமைக்கவும் முயற்சி செய்யவும்.

அன்பான வழியில் தெம்பூட்டிப் பேசுங்கள். எவரையும் குறைபாடுள்ள மனிதனாகக் கருதாமல் வாழ்பவன் முழுமனிதன். அன்பைப் பெற்றிட பல ஜீவன்கள், காத்துக்கொண்டிருக்கின்றன. மனிதனிடம் மகா சக்தியுள்ளது. அதைத் தட்டியெழுப்புவது மகாகொடை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – II

# யாழ். பல்கலைக்கழக உருவாக்கமும் எதிர்ப்பும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஈழத்தமிழரின் அறிவுக் களஞ்சியமாகப் போற்றப்படுவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகம் குறித்த விமர்சனங்களுக்கு அப்பால், அந்தப் பல்கலைக்கழகத்தின் தேவையும் அது கடந்த நான்கு தசாப்தகால ஈழத்தமிழர் வாழ்வியலில் ஆற்றிய பங்கு என்பன, மறுக்கப்பட முடியாதன.

இன்றும் பெருமையோடு பலர் எங்கள் பல்கலைக்கழகம் என வாஞ்சையோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அழைப்பதைக் காணலாம். இந்தப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தின் கதை முக்கியமானது.

ஈழத்தமிழர் வரலாற்றையும் வாழ்வியலையும் அதனிலும் முக்கியமாக எமது அரசியலையும் அதன் செல்லரித்த சீழ்பிடித்த பக்கங்களையும் அலசுவதற்கு நல்லதொரு நேர் ஆய்வாக யாழ் பல்கலைக்கழகம் உருவான கதையைப் பயன்படுத்தவியலும். இந்தப் பல்கலைக்கழகம் உருவாகக் கூடாது என்று கங்கணம் கட்டியவர்கள், குண்டெறிந்தவர்கள் அன்றைய தமிழ்த் தேசியவாதிகளே என்பதை கோடிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகம், 1942ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகமாகத் தோற்றுவிக்கப்பட்டு, முதலாவதாக கொழும்பு வளாகமும் அதைத் தொடர்ந்து 1949இல் பேராதனை வளாகமும் உருவாகின. பிரித்தானியாவின் ஒக்ஸ்பிரிஜ் முறையிலேயே, 'ஒரு பல்கலைக்கழகம்; பல வளாகங்கள்' என்ற வரையறையின் கீழ் இதன் தோற்றம் அமைந்தது. வித்தியாலங்கார, வித்தியோதய, கட்டுபத்த வளாகங்கள் பின்னர் சேர்க்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, 1974இல் யாழ்ப்பாண வளாகம் உருவானது.

1950களிலேயே தமிழருக்கான பல்கலைக்கழகம் என்று தமிழ்த் தேசியவாதிகள் பேசத் தொடங்கினார்கள். இதன் தோற்றத்தின் வேர்களைத் தேடினால், தமிழ் மக்களைப் பொதுத்தளத்தில் ஒன்றுதிரட்டக்கூடிய ஒன்றாகத் 'தமிழருக்கான பல்கலைக்கழகம்' இருந்தது.

1948இல் நிறைவேறிய பிரஜாவுரிமைச் சட்டத்தைக் காரணங்காட்டி, இலங்கை தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்தவர்களால், 1949இல் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றபோது, காங்கிரஸில் இருந்து வேறுபட்ட அடையாளமொன்று தேவைப்பட்டது. அந்த அடையாளமாகத் தமிழ் இனவாதம் முன்னிறுத்தப்பட்டது. அதன் ஒரு கோரிக்கையே, தமிழ்ப் பல்கலைக்கழகம். தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த எஸ். ஜே.வி செல்வநாயகத்தால் நடத்தப்பட்ட 'சுதந்திரன்' பத்திரிகையே இந்தத் திட்டத்தின் பிரதான பிரசாரக் கருவியானது.

1950களில் இருந்து 1970 வரையான 'சுதந்திரன்' பத்திரிகைகளைப் படித்தால், இந்தக் கோரிக்கையின் வரலாற்று வளர்ச்சியையும் அரசியல் பார்வையையும் தரிசிக்கலாம். குறிப்பாக, 1960ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி 'சுதந்திரன்' பத்திரிகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை முன்னெடுக்கத் தெரியப்பட்ட பேராசிரியர் அ. சின்னத்தம்பி, நீண்ட கட்டுரையொன்றை எழுதியிருந்தார்.

அதன்படி, 1950ஆம் முதல் பேசப்பட்டு வந்த தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற சிந்தனைக்கு வடிவம் கொடுக்கும் வண்ணம், 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் திகதி, தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தோற்றம் பெற்றது. இதே தினத்தில் தான், தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம், அரசாங்கத்தின் ஆதரவுடன் இப்பல்கலைக்கழகத்தை உருவாக்க முடிவு செய்து, அப்போது பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவை, 1957 ஜனவரியில் சந்திக்கிறார்கள்.

பிரதமர் இனஅடிப்படையிலான பல்கலைக்கழகத்துக்கு அனுமதியளிக்க முடியாதெனவும் பண்பாடு, மொழி அடிப்படையிலான கற்கைகளை அனுமதிக்கவியலும் என்றும் அதற்காகக் தனியான கல்லூரிகளை அமைப்பதற்கு உடன்படுவதாகவும் தெரிவிக்கிறார்.

பிரதமரின் ஆலோசனைகள், இந்தக் குழுவுக்கு நெருக்கடியை உருவாக்குகின்றன. ஏனெனில், அவ்வாலோசனைகள் இனவாத ரீதியில் ஒரு பல்கலைக்கழகத்தை முன்மொழிந்து, அரசியல் நடத்தும் தலைமைகளுக்கு சிக்கலானவை. "பிரதமர் மறுத்துவிட்டார்" என்று இனவாதப் பிரசாரத்தை அவர்களால் மேற்கொள்ள இயலவில்லை.

இதனால் உருவாக்கிய தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தை விட்டுவிட்டு, 1957 ஜூலையில் 'நாவலர் சபை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அது, தமிழருக்கான பல்கலைக்கழகம் என்றவொன்றை, தமிழ் மக்களிடம் பிரசாரம் செய்தது.

மறுமுனையில், பிரதமருடனான இன்னொரு சந்திப்பு 1957 செப்டெம்பரில் நடைபெறுகிறது. பிரதமர், குறித்த விடயங்களை ஆராய்வதற்கு தனியான ஆணைக்குழு ஒன்றை அமைக்க உறுதியளிக்கிறார். அதன்படி, 1958 மார்ச் மாதம் 'நீத்ஹாம் ஆணைக்குழு' என அறியப்பட்ட இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவை உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவும் இனரீதியான பல்கலைக்கழக உருவாக்கத்தை மறுத்தது.

1959 பெப்ரவரியில், சிங்கள பௌத்த கற்கைநெறிகளுக்காக உருவாக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழகத்தின் வித்தியோதய, வித்தியாலங்கர வளாகங்களைத் திறந்துவைத்து உரையாற்றிய பண்டாரநாயக்க, "இதேபோல தமிழ், இந்து, முஸ்லிம் கற்கைநெறிகளையும் அதுசார் வளாகங்களையும் உருவாக்கலாம்" என்றார்.

ஆனால், 1959 ஏப்ரலில் திருகோணமலையில் உள்ள துறைமுக உள்வீதியில், தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குக் காணி வாங்கப்பட்டு, மே மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு, நிதி திரட்டல் தொடங்கியது.

இவ்வாறு தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டி, நிதி சேகரிக்கத் தொடங்கிய நிலையில், பிரதமரைச் சந்தித்த அதேகுழு, யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவும்படி கேட்டுக்கொண்டது.

இக்காலப் பகுதியில், யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்விகற்ற இயலவில்லை. சாதிய அடையாளம் காட்டப்பட்டு, அவர்கள் பெரிய பாடசாலைகளில் அனுமதிக்கப்படவில்லை. இந்தச் சாதிய வேறுபாடுகளைத் தூக்கி நிறுத்திய ஒருவராக நாவலர் இருந்தார் என்பதும், அவரது பெயரால் அமைக்கப்பட்ட குழுவே, தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு நிதி திரட்டியது என்பதும் கவனிப்புக்குரியன.

1959இல் தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக, இந்துப் பல்கலைக்கழகம் என்ற கோரிக்கையை இலங்கை தமிழ்க் காங்கிரஸ் முன்வைத்தது. இதையடுத்து தமிழரசுக் கட்சியினர், "திருகோணமலையில் 40 ஏக்கர் காணி வாங்கப்பட்டு விட்டது. இன்னும் 40 ஏக்கர் வாங்கப்பட உள்ளது" என்று தெரிவித்தனர்.

திருகோணமலையில் உள்ள பல்கலைக்கழகம் பற்றிய செய்திகள் தவறாமல் வந்த வண்ணமிருந்தன. 1962ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி வெளியான 'சுதந்திரன்' பத்திரிகையில், திருமலைப் பட்டின எல்லைக்குள் 5.5 ஏக்கர் நிலமும் உப்புவெளியில் 70 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கட்டட அலுவல்கள் தொடக்க ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் விவசாய கல்லூரியின் ஒரு பகுதிக்கான கட்டடம் முடிவடைந்த நிலையில் உள்ளது என்றும் செய்தி வெளியாகியிருந்தது.

அதேயாண்டு ஓகஸ்ட் ஐந்தாம் திகதி சுதந்திரனில், திருமலையில் தோற்றம்பெறும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இளைப்பாறும் விடுதி வேலைகள், தண்ணீர் வசதியும் உட்பட சகல வேலையும் முடிவடைந்துவிட்டன. விவசாயப் பாடசாலை வேலைத்திட்டத்தை தொடங்கப்பட்டுள்ளது, 1963 சித்திரையில் அதன் எல்லாக் கட்டடப் பணிகளும் முடிவடையும் என்று செய்தி வெளியானது. இவ்வாறு தொடர்ந்து செய்திகள் வெளியாகிய வண்ணமிருந்தன.

1965இல் தமிழரசுக்கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளித்து, அமைச்சுப் பதவியைப் பெற்றதோடு, பல்கலைக்கழகம் பற்றிய பேச்செதுவும் இல்லை. 1968இல் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய பின்னர், மீண்டும் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற கோரிக்கையை தமிழரசுக்கட்சி கையில் எடுத்தது.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியுடன் இருந்த காலத்தில், இந்தப் பல்கலைக்கழகம் குறித்த எந்தவொரு நடவடிக்கையையும் தமிழரசுக்கட்சி மேற்கொள்ளவில்லை. இன்றுவரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெயரால் சேர்க்கப்பட்ட நிதிக்கோ, வாங்கப்பட்ட நிலங்களுக்கோ என்ன நடந்தது என்பது தெரியாது. அங்கு கட்டடங்கள் கட்டப்பட்டதா என்பது ஐயத்துக்குரியது. இதுகுறித்து, இன்றுவரை தமிழ்த் தேசியவாதிகள் யாரும் வாய் திறப்பதில்லை.

இந்தப் பின்புலத்திலேயே 1974இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வளாகமாக யாழ்ப்பாண வளாகத்தை உருவாக்குவது என்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முடிவெடுத்தார். இதைத் தமிழரசுக்கட்சி எதிர்த்தது. பல்கலைக்கழகத்துக்காக பரமேஸ்வரா கல்லூரியினதும், இராமநாதன் மகளிர் கல்லூரியினதும் கட்டடங்கள் பெறப்பட்டபோது, அரசாங்கம் சொத்துகளைப் பறிப்பதாகத் தமிழரசுக்கட்சி ஓலமிட்டது.

இராமநாதனின் அன்றைய வாரிசாகக் கருதப்பட்ட முன்னாள் செனட்டர் எஸ். ஆர். கனகநாயகம், இந்தக் கட்டடங்களில் பல்கலைக்கழகம் அமைவதை முழுமனதுடன் ஆதரித்ததுடன், பின்னர் முற்போக்கு சக்திகளால் உருவான யாழ். பல்கலைக்கழக வளாக விஸ்தரிப்பு இயக்கத்துக்குத் தலைமையேற்றார்.

தமிழரசுக் கட்சியினர் இப்பல்கலைக்கழகத்தால் தமிழர்களின் கலாசாரம் சீரழிந்துவிடும் என்றும் சிங்களவர்கள் எங்கள் இடங்களை பறிக்கப்போகிறார்கள் என்றும் பிரசாரம் செய்தனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் இவ்வாறான ஒரு பல்கலைக்கழகம் அமைவதற்கு, மக்களின் முழுமையான ஆதரவு இருந்தது. இதைத் திறப்பு விழாவிலும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளிலும் திரண்ட மக்கள் வெள்ளம் காட்டிநின்றது.

யாழ்ப்பாண வளாகத்துக்கு தலைவராகப் பேராசிரியர் க. கைலாசபதி நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத் திறப்புக்கு முதல்நாள் இரவு, கைலாசபதி தங்கியிருந்த வீட்டின்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பிரதமர் ஸ்ரீமாவோவைப் புறக்கணிக்குமாறு பூரண ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. எதனாலும் பல்கலைக்கழகம் திறக்கப்படுவதைத் தடுக்கமுடியவில்லை.

உருவான பல்கலைக்கழகத்தை முடக்க, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பேராசிரியர் கைலாசபதியின் அயராத உழைப்பும் மக்களின் ஆதரவும் அனைத்தையும் தவிடுபொடியாக்கின.

## கடிதங்கள்

### பரீட்சை கொடுப்பனவை விரைவாக வழங்குமாறு கோரிக்கை

இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள், மேலதிக பரீட்சை மேற்பார்வையாளர்கள், நோக்குநர்களுக்கான பரீட்சை கொடுப்பனவை காலதாமதமின்றி விரைவாக வழங்குமாறு, பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் 2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பல போட்டிப் பரீட்சைகள், வினைத்திறன் பரீட்சைகள், க.பொ.த சாதாரண தரப் செய்முறை பரீட்சை, தரம் 5 புலமைப் பரீட்சை போன்ற நிலையக்கடமை, மதிப்பீட்டு பணிகள், வங்கிகளால் நடத்தப்பட்ட பரீட்சை, AAT பரீட்சை உட்பட ஏனைய பரீட்சைக் கடமையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவை காலதாமதமின்றி வழங்கக்கோரி, பரீட்சை கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள், அதுதொடர்பான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். நாட்டில் மனித பாவனைக்கு பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களின் விலையேற்றத்துக்கு மத்தியில், பரீட்சை கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள் இன்றைய செலவுகள் அதிகரிப்புக்கு மத்தியில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கித் திணறுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும். நாட்டில் கூலித்தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் நாளாந்த வேதனம் 2,500 ரூபாய்க்கு குறைவுபடாமல் வழங்கப்படும் இன்றைய சூழ்நிலையில், காலை முதல் மாலை வரையும் நடைபெறும் பரீட்சைக்கான கொடுப்பனவு போதாது என்றும் இது குறித்து கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கின்றனர்.

பைஷல் இஸ்மாயில்

# ரஷ்யாவுக்கு எதிராக இந்தியா அதிரடி



உக்ரேன் - ரஷ்யா இடையே இடம்பெற்றுவரும் போர் விவகாரத்தில் இதுவரை இந்திய அரசானது ஐ.நா சபை உள்ளிட்ட அனைத்து அமைப்பிலும் நடுநிலை வகித்து வந்தது.

இந்நிலையில் முதன் முறையாக உக்ரேன் மீதான இராணுவ நடவடிக்கைகளை, ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இந்தியா ஆதரவு அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், போர் நடவடிக்கையை கைவிட்டு, இரு நாடுகளும் பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என சர்வதேச நீமன்றம் உத்தரவிட்டதற்கு, 13 நாடுகள் ஆதரவு அளித்திருந்த நிலையிலேயே தற்போது இந்தியா தரப்பில் சர்வதேச நீதிமன்றத்தில் பிரதிநிதியாக பங்கேற்றிருந்த நீதிபதி தல்வீர் பண்டாரி, ஆதரவாக வாக்களித்தார் என்பது உலகரங்கில் பெரும் பேசுபொருள் ஆகியுள்ளது.

இருப்பினும், சர்வதேச நீமன்றத்தின் தீர்ப்பு, போரை நிறுத்த வழிவகுக்கும் என்பதால், இந்தியா தரப்பில் ஆதரவு அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இத் தீர்மானத்திற்கு ரஷ்யா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும் எதிராக வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 100 கோடியை நெருங்கும் 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்'




இரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் விவேக் அக்னிகோத்ரி இயக்கத்தில் 'தி காஷ்மீர் பைல்ஸ்' என்ற பொலிவூட் திரைப்படம் மார்ச் 11 ஆம் திகதி வெளியானது.

இத் திரைப்படமானது, 80களின் பிற்பகுதியில் இடம்பெற்ற காஷ்மீர் கிளர்ச்சியின் போது, அங்கிருந்த இந்துக்கள் காஷ்மீரத்தை விட்டு வெளியேறியதை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்படத்தில் மிதுன் சக்கரவர்த்தி, அனுபம் கெர், தர்ஷன் குமார், பல்லவி ஜோஷி, சின்மயி மண்டலேகர், பிரகாஷ் பெலவாடி, புனித் இஸ்ஸார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப் படத்துக்கு அரியானா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தற்போது இப் படமானது நாடு முழுவதும் பல தரப்பினரிடமிருந்தும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

குறிப்பாக இந்தியப் பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷா உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் இத் திரைப்படத்தை வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது இத் திரைப்படம் வெளியாகிய 6 தினங்களில் இந்தியாவில் மட்டும் இந்திய மதிப்பில் 80 கோடி ரூபாய் வசூல் சாதனை படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று அல்லது நாளை இத் திரைப்படம் 100 கோடி ரூபாய் வசூல் சாதனையை படைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப்

# பாராளுமன்றத்தில் ஹர்பஜன் சிங்?




பஞ்சாப் சட்டசபை தேர்தலில் மொத்தமுள்ள 117 தொகுதிகளில் ஆம் ஆத்மி 92 தொகுதிகளை கைப்பற்றி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.

இந்நிலையில் ஆம் ஆத்மி கட்சி சார்பில் இந்திய அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக ஆம் ஆத்மியின் வெற்றிக்குப் பிறகு, ஹர்பஜன் சிங், பகவந்த் மான் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துத் தெரிவிக்கும் விதமாக 'புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஆம் ஆத்மி கட்சிக்கும் எனது நண்பர் பகவந்த்மான் அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்' எனத் தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது .

இந்தியா

# சிறுவர்கள் குறித்து அதிர்ச்சி தகவல்



கொரோனாத் தொற்றுப்பரவல் காரணமான வீட்டில் இருந்தவாறு கற்றலை மேற்கொள்ள, பாடசாலை மாணவர்கள் அதிக அளவில் திறன்பேசிகளைப் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், இந்தியாவில் சிறுவர்களிடம் அலைபேசி ஏற்படுத்திய விளைவுகள் குறித்து, மத்திய அரசு மேற்கொண்ட ஆய்வில், திடுக்கிடும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

இது குறித்து சிறுவர்கள் நலத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, கருத்துத் தெரிவிக்கையில்; "37.15 சதவீதமான சிறுவர்கள் தூங்குவதற்கு முன்னர் திறன்பேசியைப் பயன்படுத்துகின்றனர். அதில் 23.30 சதவீத சிறுவர்கள் படுக்கையில் வைத்து திறன்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர்" எனவும் தெரிவித்தார்.

# இந்தியாவில் ஹைட்ரஜன் கார்



இந்தியாவில் ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்தும் முதல் காரை டொயோட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது, பசுமையான மற்றும் தூய்மையான எரிபொருள் தீர்வுக்காகப் பன்னாட்டுத் தானியங்கித் தொழில்நுட்ப மையத்துடன் இணைந்து இந்திய அரசு மேற்கொண்ட முன்னோடித் திட்டத்தின் ஒருபகுதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஹைட்ரஜனை எரிபொருளாகக் கொண்ட மின்சார வாகனங்களில் ஒன்றான டொயோட்டாவின் மிராய் வகைக் கார் ஒரு முறை சார்ஜ் செய்தால் 646 கிலோ மீற்றர் வரை செல்லும் திறன்கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்காரில் அதிக அழுத்தத்தைத் தாங்கும் ஹைட்ரஜன் எரிபொருள்தாங்கியும், மின்மோட்டாரும் உள்ளதால் ஹைட்ரஜனை நீராகவும் ஒட்சிசனாகவும் மாற்றுவதன் மூலம் கார் ஓடுவதற்கான ஆற்றல் கிடைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இக் காரில் உள்ள எஞ்ஜினானது, புகையை வெளியிடுவதற்குப் பதிலாக நீரை வெளியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா

# மகிழ்ச்சியில் இந்தியர்கள்

2022 ஆம் ஆண்டுக்கான உலகப் பணக்காரர்கள் பட்டியலை ஹூரூன் நிறுவனம் மற்றும் எம்3எம் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் இணைந்து வெளியிட்டன.

இப்பட்டியலில் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனத்தின் ஸ்தாபகர் எலான் மஸ்க் முதலிடத்தையும் அமேசான் தலைவர் ஜெப் பெசோஸ் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்நிலையில் இப்பட்டியலில் இந்தியாவின் முகேஷ் அம்பானி இந்திய மதிப்பில் சுமார் 7.7 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் 9ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.



அத்துடன் சீரம் மருந்து நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சைரஸ் பூனாவாலா, டிமார்ட் நிறுவனர் தமானி, லட்சுமி மிட்டல் ஆகியோர் உலக பணக்காரர்கள் 100 பேரில் முதல் முறையாக இடம் பிடித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானிக்கு அடுத்தபடியாக இந்திய மதிப்பில் சுமார் 6 லட்சம் கோடி ரூபாய் உடன் அதானி 2ஆம் இடத்தையும், 2 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் எச்.சி.எல்., நிறுவனர் ஷிவ் நாடார் மூன்றாம் இடத்திலும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் செய்தியானது இந்தியர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## New Anthoney's Farms இன்

# e-வணிக கட்டமைப்பு வசதி




NewAnthoney's Farms (Private) Ltd இனால், வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கு தரமான கோழி இறைச்சியை இலவசமாக தருவித்துக் கொள்ளும் புதிய e-வணிகக் கட்டமைப்பான 'Dorakadapaliya' என்பதை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

சுவை நிறைந்த கோழி இறைச்சி தயாரிப்புகளை நாடு முழுவதிலும் விநியோகிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட Dorakadapaliya கட்டமைப்பினூடாக, சிறந்த மற்றும் பாதுகாப்பான கோழி இறைச்சியை, வாடிக்கையாளர்கள் தமது இருப்பிடத்துக்கு தருவித்துப் பெற்றுக் கொள்ள முடியும். புகழ்பெற்ற HarithaHari தெரிவுகளிலிருந்தும் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையானவற்றை தெரிவு செய்து கொள்ள முடியும். Dorakadapaliya இனால் நாடு முழுவதிலும் விநியோக சேவை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படுவதுடன், வாடிக்கையாளர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து சௌகரியமான முறையில் ஒரு பொத்தனை அழுத்தி, இலகுவாக தமக்கு தேவையான கோழி இறைச்சியை பெற்றுக் கொள்ள முடியும்.

மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய அல்லது கொம்போஸ்ட் ஆக்கக்கூடிய, இலகுவில் உக்கக்கூடிய பொதியில் விற்பனையாகும் HarithaHari தெரிவுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களால் நாவூறும் கிறிஸ்பி சிக்கன் தெரிவான 'Crizzpy's' கோழி இறைச்சித் தெரிவுகளிலிருந்தும் தமக்கு தேவையானதை பெற்றுக் கொள்ள முடியும். கொண்டாட்டங்கள் மற்றும் ஏதேனும் விசேட நிகழ்வுகளுக்கு மிகவும் பொருத்தமான, பிரீமியம் தெரிவான கிரில், பேக் அல்லது BBQ முறையில் தயாரித்துக் கொள்ளக்கூடிய சகல இயற்கையான மூலப்பொருட்களையும் கொண்டு தயாரிக்கப்படும் 'SpicyDycy'அல்லது சிறந்த 'Chico' தெரிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

New Anthoney's Farms இன் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "நாடு முழுவதிலுமுள்ள எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, எமது ஒன்லைன் விற்பனைப் பகுதியை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். உணவு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள போது, வாடிக்கையாளர்களின் தன்னிறைவு என்பதற்கு நாம் முக்கியத்துவமளிக்கின்றோம். எமது பல செயற்பாடுகள் இதனை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன. இது ஒரு சாதாரண பிரிவு விரிவாக்கம் மாத்திரமன்றி, நுகர்வோர் மத்தியில் உறுதியான உறவை பேணும் நாம், தரமான கோழி இறைச்சி வகைகளை தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்படுத்தியுள்ள அடிப்படை வசதியாகவே கருதுகின்றோம்" என்றார்.

New Anthoney's Farm இன் Haritha Hari என்பது, முற்றிலும் இயற்கையான செயன்முறையாக அமைந்திருப்பதுடன், போஷாக்கு நிறைந்த மற்றும் எந்தவோர் அன்ரிபயோடிக் அல்லது ஹோர்மோன் திரிபு அற்ற முறையில் பேணப்பட்டு, முற்றிலும் இயற்கையாக தயாரிக்கப்படுகின்றது. அதிகளவு இடவசதி மற்றும் அழுத்தமில்லாத சூழலில், ஆரோக்கியமான கோழி வளர்ப்பில் ஈடுபடுவது என்பது New Anthoney's Farms க்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. விலங்கு நலன், பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் போன்றன தொடர்பான பொறுப்புகள் உற்பத்தியாளரின் கலாசாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களாக காணப்படுவதுடன், அமெரிக்காவின் தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

## யூனியன் அஷ்யூரன்ஸின்

# ஒப்பற்ற வளர்ச்சி

யூனியன் அஷ்யூரன்ஸ் 2021 ஆம் ஆண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்ததனூடாக, இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்திருந்தது. சில முக்கியமான பிரிவுகளில் ஒப்பற்ற வளர்ச்சியை நிறுவனம் பதிவு செய்திருந்தது. சிறந்த 5 துறைசார் செயற்பாட்டாளர்கள் மத்தியில் அதியுயர் வழமையான புதிய வியாபார வளர்ச்சியை இந்நிறுவனம் பதிவு செய்திருந்ததுடன், துறையின் சராசரியான 29% உடன் ஒப்பிடுகையில் 42% வளர்ச்சியை எய்தியிருந்தது. ஒட்டுமொத்த தொழிற்றுறையில் இரண்டாவது மாபெரும் வழமையான புதிய வியாபார தயாரிப்பாளராக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்ந்தது. மேலும், 2021 ஆம் ஆண்டில், நிறுவனம் Million Dollar Round Table (MDRT) இல் 300 தகைமையாளர்களை உருவாக்கியிருந்தது. இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறை வரலாற்றில் இதுவரையில் பதிவாகியிருந்த அதியுயர் எண்ணிக்கையாக இது அமைந்துள்ளது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களுக்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்த நிலையில், இந்தச் சிறந்த பெறுபேறுகளை யூனியன் அஷ்யூரன்ஸ் எய்தியிருந்தமை விசேட அம்சமாகும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவனத்தின் வினைத்திறன் தொடர்பில் அதிகளவு பெருமை வெளியிட்டிருந்தார். இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையை மாற்றியமைக்கும் தூரநோக்குடைய தந்திரோபாயத்திட்டத்தினூடாக இந்த வெற்றிகரமான பெறுபேறுகளை எய்த முடிந்திருந்ததாக குறிப்பிட்டார்.




"வாடிக்கையாளர்களை மையப்படுத்திய தந்திரோபாயம், சுறுசுறுப்பு, ஒப்பற்ற டிஜிட்டல் அனுபவம் போன்றவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான தீர்வுகளை வழங்கி, அதனூடாக இலங்கையின் கனவுகளுக்கு வலுவூட்டும் உறுதி மொழியை பேணியிருந்ததனூடாக எமது உறுதியான பெறுபேறுகளை பதிவு செய்யக்கூடியதாக இருந்தது" என்றார்.

நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கியிருந்த ஊழியர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் இதர பிரதான பங்காளர்களுக்குக் கோம்ஸ் தனது நன்றிகளை தெரிவித்தார். "எம்மை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்வதில் எம்மீது நம்பிக்கை கொண்டு, எமக்கு பங்களிப்பு வழங்கியிருந்த வாடிக்கையாளர்களுக்கு நாம் நன்றி தெரிவிப்பதுடன், நிறுவனத்தின் சாதனைகள் மற்றும் மைல்கற்கள் போன்றன எதிர்கால வளர்ச்சிக்கு சிறந்த அடித்தளமாக அமைந்திருந்தன. பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்து, இலங்கையர்களின் வாழ்க்கைக்கு வலுவூட்டுவதற்கு உதவியாக அமைந்திருக்கும்" என்றார்.

2021ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் சில முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் சாதனைகளைப் பதிவு செய்திருந்தது. நிகர செலுத்தப்பட்ட கட்டுப்பணம் (GWP) ரூ. 15 பில்லியனை கடந்திருந்தது. இது முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 13 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பாகும். வழமையான புதிய வியாபார கட்டுப்பணங்கள் ரூ. 3.1 பில்லியன் முதல் ரூ. 4.4 பில்லியனாக அதிகரித்தது. ஆண்டில் முதலீட்டு வருமானம் ரூ. 5 பில்லியனை கடந்திருந்தது. மொத்த தேறிய வருமானம் ரூ. 17.4 பில்லியனிலிருந்து ரூ. 20.6 பில்லியனாக அதிகரித்திருந்ததுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக தேறிய பணப்பாய்ச்சல் ரூ. 8.3 பில்லியனிலிருந்து ரூ. 9.3 பில்லியனாக அதிகரித்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி அஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இலாபகரத்தன்மையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை நாம் பதிவு செய்திருந்தோம். வரிக்கு முந்திய இலாபம் 46% இனால் அதிகரித்து ரூ. 2.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 1.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 921 மில்லியனிலிருந்து ரூ. 2.1 பில்லியனாக அதிகரித்திருந்தது. GWP, தேறிய முதலீட்டு வருமானம், செலவுகளை முறையாக கட்டுப்படுத்தியிருந்தமை மற்றும் செயன்முறை முன்னேற்றங்கள் போன்றவற்றினூடாக இந்த அபார 123% வளர்ச்சியை எய்த முடிந்தது" என்றார்.

சம்பியன்ஸ் லீக்:

# வெளியேற்றப்பட்ட ஜுவென்டஸ்

சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்பானிய லா லிகா வில்லாறியலுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 1-4 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்றே ஜுவென்டஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

வில்லாறியலுடனான முதலாவது சுற்றுப் போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், ஜுவவென்டஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் தோல்வியைத் தழுவியிருந்தது.





மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் இங்கிலாந்து முன்னிலையில் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜோ றூட், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இங்கிலாந்து சார்பாக மத்தியூ பிஷர் அறிமுகத்தை மேற்கொண்டதுடன், டெஸ்ட் போட்டிகளில் சஹிப் மஹ்மூட் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, முதல் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், றூட் ஆட்டமிழக்காமல் 119 ஓட்டங்களுடன் உள்ளார். டான் லோரன்ஸ் 91, அலெக்ஸ் லீஸ் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், ஜேடன் சியல்ஸ், வீராசாமி பெருமாள், டான் லோரன்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.



# இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு ஆசிர்வாதம்

அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் இடையான Savate குத்துச்சண்டை போட்டியில் பாகிஸ்தான், லாகூரில் சென்று பதக்கங்களை வென்று வந்த இலங்கை வீர, வீராங்கனைகளுக்கான ஆசிர்வாதம் வழங்கும் நிகழ்வு கொலன்னாவ ரஜமகா விகாரையில் தலைமை பௌத்த விகாராதிபதியின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

> Savate குத்துச்சண்டை போட்டியில் பதக்கங்களை வென்றவர்களுக்கு ஆசிர்

இந்நிகழ்வானது, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளர் முஹமட் இஃதிஸான் மற்றும் கொழும்பு, கம்பஹா மாவட்டப் பணிப்பாளர் நசார் ஏ. காமில் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது, கிக் பொக்சிங் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர்களான டில்ஷாத், ஷாகிர் ஹுஸைன் மற்றும் மத்திய மாகாண வை.எம்.எம்.ஏ அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# ஆர்சனலை வீழ்த்திய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாக, டியகோ ஜோட்டா, றொபேர்ட்டோ பெர்மினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 69 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது.



உக்ரேன்

# திரையரங்கின் மீது குண்டுவீச்சு

உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரானது 21 நாள்களைக் கடந்து நீடித்து வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த திரையரங்கின் மீது ரஷ்யப் படைகள் குண்டு வீசியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மரியுபோல் நகரில் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதால் அங்கிருந்த திரையரங்கில் ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறிப்பிட்ட திரையரங்கத்தின் மீது ரஷ்யப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் திரையரங்கின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இத் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.



இஸ்ரேல்

# உருமாறிய புதிய கொரோனா கண்டுபிடிப்பு




இஸ்ரேலில் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பென்குரியன் விமான நிலையத்திற்கு வந்த 2 பயணிகளுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் இப் புதிய வகை வைரஸ் மாறுபாடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இம் மாறுபாடு இன்னும் உலகம் முழுவதும் கண்டறியப்படவில்லை என்று இஸ்ரேல் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பு டெல்டா வகை மற்றும் ஒமைக்ரோன் வைரஸ் இணைந்து 'டெல்டாக்ரோன்' உருவானதுபோல் ஒமைக்ரோனின் வைரஸின் துணை வகைகளான பி.ஏ.-1 மற்றும் பி.ஏ.-2 ஆகியவை இணைந்து இப்புதிய வகை கொரோனா வைரஸ் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

# ரஷ்யாவுக்கு உக்ரேன் எச்சரிக்கை



நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா தொடர்ந்து 21 ஆவது நாளாகத் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் காரணமாக உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யா மீது பல தடைகளை விதித்து வருகின்றன.

அதே சமயம் உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்து வரும் போரை நிறுத்த உத்தரவிடுமாறு, நெதர்லாந்தின் ஹேக் நகரத்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரேன் கோரியிருந்தது.

அதன்படி சர்வதேச நீதிமன்றம் போரை உடனே நிறுத்த வேண்டும் என்று ரஷ்யாவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

> உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்து வரும் போரை நிறுத்த உத்தரவிடுமாறு, நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரேன் கோரியிருந்தது. அதன்படி சர்வதேச நீதிமன்றம் போரை உடனே நிறுத்த வேண்டும் என்று ரஷ்யாவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் இவ் உத்தரவை மீறி செயற்பட்டால் உலக நாடுகளிடமிருந்து , ரஷ்யா தனிமைப்படுத்தப்படும் என உக்ரேன் ஜனாதிபதி ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்

இந்நிலையில் இவ் உத்தரவை மீறி செயற்பட்டால் உலக நாடுகளிடமிருந்து , ரஷ்யா தனிமைப்படுத்தப்படும் என உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



ஜப்பான்

ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

# நால்வர் மரணம்

ஜப்பானின் வடக்கு பகுதியில் உள்ள புகுஷிமா கடலோர பகுதி, டோக்கியோ, ஹொன்சு தீவில் நேற்று முன்தினம் (16) சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று உணரப்பட்டது.

கடலுக்கடியில் 60 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் கடுமையான அதிர்வுகள் ஏற்பட்டன. புகுஷிமா கடலோர பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.3 அலகாக பதிவாகியிருந்ததாகவும் அதிகபட்சமாக ஹொன்சு தீவில் 7.4 ரிச்சர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந் நிலநடுக்கத்தால் 4 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 90 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் சுமார் 20 லட்சம் வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஜப்பான் நாட்டு விமானப்படை ஆய்வு செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதே போல், பாகிஸ்தானின் ஸ்கார்டு பகுதி, இந்திய எல்லைப் பகுதியான லடாக் பகுதிகளிலும் சிறிது நேரம் நிலநடுக்கம் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

# ஆட்சி கவிழும் சூழலில் பாகிஸ்தான்?

கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை இழந்துவிட்டதால் பாகிஸ்தானின் தற்போதைய ஆட்சி கவிழும் சூழல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், அந்நாட்டின் 'பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கை போன்றவற்றில் மிகவும் தவறான முடிவுகளை எடுத்துள்ளதாகக் கூறி 'பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து எதிர்வரும் 28ஆம் திகதி இது குறித்த வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கான் மீது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக் காணப்படுவதால் அவர் பதவி விலகும் வாய்ப்பு அதிகளவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை முறியடிப்பது குறித்து தலைமை வழக்கறிஞர் மற்றும் கூட்டணி கட்சியினர் உடன் பிரதமர் இம்ரான் கான் ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 18 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.